பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆடி 21 ஷஃபா: 19 இதழ்: 175

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 5-8-77

யாழ்.ரோட்டரி
கா ணி வ ல்
இலவசக் காட்சிகள்
சென். பற்றிக்ஸ்கல்லூரி
மைதானம்
30-7-77 — 10-8-77
திகிலூட்டும் நெருப்பில் பெண்ணின் பயங்கரபாய்ச்சல். 'பப்பட்' காட்சி கரகாட்டம். மாயா ஜாலவித்தைகள். பொப் நிகழ்ச்சிகள்.
தினமும் நடைபெறும்.

## சிறிமாவை ஜே. ஆர். எதிர்கொண்டு அழைத்தார்!

கொழும்பு, வியாழன்

தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் கலந்துகொள்ளும் பொருட்டு தேசியப் பேரவைக்குள் தமது ஏனைய எம். பிக்களுடன் முன்னாள் பிரதமரும் அத்தனகல எம். பி.யுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நுழைந்தபோது அவரை பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்கொண்டு இன்முகத்துடன் வரவேற்று நல்வாழ்த்துக்கூறிசபைக்குள் கூட்டிச் சென்றார்.

### ஜே. ஆரும் அமிரும்

இதேபோல் சபை சிறிது ஒத்திவைக்கப்பட்டு ஜனாதிபதியின் விசேட மேடையை நோக்கி உறுப்பினர்கள் சென்றபோது பிரதமர் திரு. ஜே. ஆர். எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தை தம்முடன் அழைத்துச் சென்றார். பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஒன்றாக இப்படியான நிகழ்ச்சிக்கு செல்வது சம்பிரதாயமுமாகும். [உ]

# "தமிழர் பிரச்சினைகளை சர்வகட்சி மாநாடு மூலம் தீர்ப்போம்

## கல்வி தொழில் வாய்ப்பிலும் நியாயமான இடம்"

### அரசின் கொள்கை விளக்கம்

(எஸ். எச். ஜி.) (கொழும்பு)

"இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். சர்வகட்சி மாநாடு கூட்டித் தமிழர் பிரச்சினைகளைக் காலதாமதமின்றித் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுப்போம்'

இலங்கைக் குடியரசின் இரண்டாவது தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்துகையில் இவ்வாறு கூறினார் அந்த உரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

### தமிழ் மக்களுக்கும் பிரச்சினை உண்டு

இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டு என்பதை நாம் ஏற்கிறோம்காலதாமதமின்றிஇவற்றைத் தீர்த்து வைக்கவே விரும்புகிறோம்.

இதன் அடிப்படையில் சர்வகட்சி மாநாடு கூட்டப்படும்.

கல்விக்கு உரிய இடமளிக்கப்படும். அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் தொழில் வாய்ப்பு நியாயபூர்வமாகத் தமிழ் மக்களுக்கு அளிக்கப்படும்.

### தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

தனியரசுக் கொள்கைக்கு ஆதரவு கொடுக்க வேண்டிய நிலைக்கு தமிழ்மக்கள் வந்துள்ளமையால் தேசிய ஒற்றுமை கருதி விரைவில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண முடிவு செய்துள்ளோம்.

கல்வி, குடியேற்றம், தமிழ் மொழி உபயோகம் ஆகியவற்றிலும் உரிய இடமளிக்கப்படும்.

### புதிய அரசியலமைப்பு

ஜனநாயக சோஸலிச சமுதாயம் ஒன்றை உருவாக்கப் புதிய அரசியலமைப்பைத் திட்டம் ஒன்று அமைக்கப்படும்.

புதிய அரசியல்அமைப்பில் பத்திரிகைத்துறை,நீதித்துறை ஆகியவற்றில் அரசியல்கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு,அடிப்படைஉரிமைகள் பேணிப்பாதுகாக்கப்படும்.

நாட்டின் சகலஇன மக்களினதும் அடிப்படை உரிமைகளும், ம[illegible] காக்கப்படும்.

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஈழ அடிப்படையில் திருத்தப்பிரேரணை

(கொழும்பு)

புதியஅரசின்கொள்கைப் பிரகடனம் மீதான விவாதம் தேசிய அரசுப்பேரவையில் நடைபெறும்போது எதிர்க்கட்சியான தமிழர்விடுதலைக் கூட்டணி தமிழ்மக்களின் ஏகோபித்த குரலான "தமிழ் ஈழ' அடிப்படையில் திருத்தப் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும் என்றும் கூட்டணிப்பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

தேசியஅரசுப்பேரவையின் ஆரம்பவிழாவில் கலந்து

6-ம் பக்கம் பார்க்க

## "விடுதலை நாடும் இனத்தின் பிரதிநிதிகளாக வந்துள்ளோம்"

### பேரவையில் 'அமிர்' நிகழ்த்திய உரை

(கொழும்பு)

"நாம் தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சிப் பொறுப்பை வகிக்க வந்திருக்கிறோம் என்பதிலும் பார்க்க எமது இனம் இழந்த உரிமையைப்பெற வேண்டியும் விடுதலை நாடிநிற்கும் இனத்தின் பிரதிநிதிகளாக இங்குவந்திருக்கிறோம் என்பதே பொருந்தும். இந்த வகையில் ஆட்சிமன்ற சம்பிரதாயங்களைக் கூட நாம் மீற நேரிடலாம்''.



இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம்.பியுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் இன்று தேசியஅரசுப் பேரவையில் சபாநாயகரின் தெரிவையடுத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் தமிழில் நிகழ்த்திய தமது உரையில் கூறியதாவது "புதிய சபாநாயகரைப் பாராட்டி வாழ்த்துகிறேன். எதிர்க்கட்சியினராகிய நாம் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும்கூட கணிசமான மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் இங்கு சமூகமளித்துள்ளோம் என்பதை சபாநாயகர் மனதில்கொள்ளவேண்டும்.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்" சபாநாயகர் நீதிவழுவாது நடந்து கொள்ள வேண்டும்.

நீதியாக எதிர்க்கட்சிக்கு உரிய இடமளித்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

### ஆட்சிமன்ற தராசு

இன்றைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் 139 ஸ்தானங்களைப் பெற்றிருந்தாலும்கூட தராசைப் பொறுத்தவரையில் பாரமாக

(6ம்பக்கம் பார்க்க)

### புதிய சபாநாயகர் அல்விஸ்;

## பிரேமா முன்மொழிய 'அமிர்' வழிமொழிந்தார்

(நமது விசேட நிருபர்)

இலங்கைக் குடியரசின் இரண்டாவது தேசிய அரசப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடர் இன்று முற்பகல் ஆரம்பமாகியது.

புதிய சபாநாயகராக கோட்டைத் தொகுதி எம். பி. திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உப-சபாநாயகராக பேருவளை எம். பி. ஜனுப் மக்கீன் மாக்கரும், குழுக்களின் உப-தலைவராக திரு. பெலிகமன வும் ஏகமனதாகத் தெரிவாகினர்.

ஆட்சிமன்றக் கூட்டத் தொடர் இன்று முற்பகல் ஆரம்பமாவதற்கு முன்பாக அதிகாலையிலிருந்தே மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து காலிமுக மைதானத்தில் திரளத் தொடங்கினர்.

இன்று கூட்டத் தொடர் ஆரம்பமாவதையொட்டி தலைநகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

### மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள்

முதியோர், சிறியோர் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்துக் கொண்டிருந்தனர்.

தேசியப் பேரவைக்கு முன்பாகக் கம்பீரமாகக் காணப்படும் காலஞ்சென்ற பிரதமர் அமரர் டி. எஸ். சேனநாயக்காவின் சிலைக்கு அருகே தேசியக்கொடிகள் பட்டொளி

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நீதியைச் செம்மைப்படுத்துவதற்கு தயாள குணம் தேவைப்படுகின்றது. அதேவிதம் நீதியில் தயாளகுணம் செம்மைப்படவேண்டும்.

.. மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

THE EELANAADU


## வரலாற்று நிகழ்ச்சி

இந்த நாட்டின் சமீப கால அரசியல் வரலாற்றில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியொன்று நேற்று நடந்து முடிந்துள்ளது.

தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரின் சம்பிரதாயமான திறப்புவிழா நிகழ்ச்சியையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் இது வரை காலமும் நடைபெற்றிராத முறையில் தேசிய சிறுபான்மை இனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்து பணியாற்ற ஆரம்பித்துள்ளார்.

நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை வானொலி மூலம் கேட்டவர்களும் பத்திரிகைகளில் படித்தவர்களும், எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பினை ஏற்றிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தங்கள் கடமைகளை உணர்ந்து விவேகத்துடன் செயலாற்றத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்திருப்பர்.

சபாநாயகர் தெரிவின் போது சபைமுதல்வர் திரு. ஆர். பிரேமதாஸா சிங்கள மொழியில் முன்மொழிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தமிழ்மொழியில் வழிமொழிய திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் சபாநாயகராக ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சபாநாயகரைப் பாராட்டி திரு. அமிர்தலிங்கம் தமிழில் நிகழ்த்திய உரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் தங்கள் நிலையையும், தாங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்களின் அபிலாஷைகள் பற்றியும் குறிப்பிட்டு சபை நடவடிக்கைகளில் தாங்கள் எதிர்காலத்தில் நடந்து கொள்ளப்போகும் முறையையும் சூசகமாக எடுத்துக் கூறினர்.

இதற்கு முன்னர் தேசிய அரசுப்பேரவைக்கு முன்னாள் பிரதம மந்திரியும் அவரது சகாக்களும் வருகை தந்த பொழுது புதிய பிரதம மந்திரி முகமலர்ச்சியுடன் சென்று அவர்களை அழைத்து வந்து ஆமரச்செய்தார்.

புதிய சபாநாயகர் தமது நன்றி உரையில் ஆளுங்கட்சிக்கோ எதிர்க்கட்சிக்கோ பக்கச்சார்பு காட்டாமல் நடந்துகொள்வதாக உறுதி அளித்தார்.

இவை அனைத்தையும் பார்க்கையில் புதிய தேசிய அரச பேரவையின் ஆரம்ப நிகழ்ச்சிகள் யாவும் மிகநம்பிக்கையளிப்பனவாக இருப்பதுடன் இந்த நாட்டில் அமைதியும் சமூக ஒற்றுமையும், சௌஜன்யமும் வளர்வதற்கான சூழ்நிலை மிக நல்ல முறையிலே உருவாகி வருவதாக நம்பலாம்.

## நல்லூர் வருடாந்த உற்சவ ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 20ந்திகதி ஆரம்பமாகும் நல்லூர் கந்தசாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, யாழ். மாநகரசபை ஆலய வீதிகளில் தற்காலிக கடைகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இவைகள் ஒவ்வொரு வருடமும் போல் வர்த்தகர்களுக்கு டெண்டர்மூலம் வாடகைக்கு விடுவதற்கு முடிவு செய்துள்ளது. இதற்கான மாநாடு ஒன்று உற்சவஒழுங்குகள்பற்றி கூட்டப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில், பொலிஸ் பகுதி, சுகாதாரப்பகுதி, மாநகரசபைப்பகுதி, ஆலய பரிபாலனசபை அதிகாரிகள் பங்குகொண்டு உற்சவ ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவம், 25 தினங்களுக்கு நடைபெறும். எதிர்வரும்செப்டம்பர் 12ந் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். (செ)

## மடுத்திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மடுத்திருப்பதியில் திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 15ம் திகதிவரை திருவிழா வழிபாடுகள் நிகழ்ந்து அன்று காலை திருச்சுரூப சுற்றுப் பிரகாரத்துடன் விழா முடிவடையும் பல இலட்சம் யாத்திரிகர்கள் இப்பொழுது இருந்தே இங்குகூடத் தொடங்கியுள்ளனர். (கி-அ)

## இவர்களுக்கு 6-ந் திகதி பென்சன்

யாழ்ப்பாணம் வெள்ளி

இலங்கையின் புகையிரதப் பகுதி யாழ்ப்பாண புகையிரத நிலைய ஓய்வூதிய ஊழியர்களின் ஓய்வூதியம் 6ம் திகதி சனிக்கிழமை வழங்கப்படும்.

இவ்வூதியம் இனி தொடர்ந்தும் ஒவ்வொரு மாதமும் 6ம் திகதியே வழங்கப்படும். இதுவரை இவ்வூதியம் 10 ம் திகதி தோறும் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (கா-அ)

## புதிய சபை பிரதிபலிக்கும்

கொழும்பு, புதன்

காணிச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ்நஷ்டஈடுகோரிவிண்ணப்பித்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு புதிய சபை இது பற்றிப் பரிசீலனை செய்யவிருப்பதாக விவசாய காணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்க அறிவித்துள்ளார்.

நஷ்டஈடுகோரி சுமார் 5000 பேர் விண்ணப்பித்திருப்பதாகவும் கூறிய அவர் முன்னர் ஜி. பி. ஏ. சில்வா தலைமையிலான சபை நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார். (கு)

## குருபூசை

கொழும்பு, வியா.

கொழும்பு விவேகானந்த சபையில் இம்மாதம் 6ம் தேதி மாலை சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை நடைபெறும் (க)

# ரோட்டறி காணிவலில் சிலமணி நேரம்

— பற்றிமாகரன் —

''யாழ் ரோட்டறிக் காணிவல்'' வண்ண நிற மின் ஒளியில் பளிச்சுப்பளிச்சென மின்னியது. வாயிலில் வரவேற்புச் சிகரம். அருகினிலே கம்பீரமாக அசைந்தாடி வாரீர் வாரீர் ஒருமுறை பாரீர் பாரீர் என அழைத்தன. சம்பத்திரிசியார் கல்லூரியின் பச்சை-மஞ்சள் நிறக் கொடியும் யாழ் ரோட்டறிச் சங்கக் கொடியும் முண்டியடித்துக் கொண்டு நுழையும் கும்பலுடன் ஒருவனாக உள்ளே நுழைந்தேன்.

### ஒளிநகரம்

பச்சைப்புல் மேடையிலே பரந்து கிடந்தது ஒரு எழில் நகரம்-ஒளிநகரம். ஆம். மின்னும் விளக்குகள் கண்ணைப் பறித்து வர்ண ஜாலம் புரிந்தன. அப்பாடா மின்விளக்கு சோடனையில் தான் எத்தனை வகை. கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் பத்திரிசியார் கல்லூரிக் கட்டிடத்தின் 2-வது மாடியிலே மாலைகளாய் தொங்கிக் கண்ணைச் சிமிட்டின சில ஆயிரம் மின் குமிள்கள் மைதானத்தில் அமைந்துள்ள கோவில் முகட்டினிலே அன்றலர்ந்த பூக்களென நிறைந்து கிடந்து ஒளியைச் சிந்தின வேறு சில ஆயிரம் மின்குமிழ்கள். மைதான விளிம்பினிலே சீறி எழும் நீர்த்தாரைகளுக்கு பளபளப்பு ஊட்டின சில குமிழ்கள், சுழலும் ராட்டினங்களுடன் சேர்ந்து சுற்றின சிலமின் குமிழ்கள் இத்தனையும் போதாதென பச்சை மரங்களிலும்-பட்ட மரங்களிலும்-பார்க்கும் இடமெல்லாம் பல்லாயிரம் மின்குமிழ்கள். மொத்தத்தில் ஒரு ஒளிநகரையே சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் அமைத்து வைத்திருந்தார்கள்.

### கேட்பவை கொடுப்பவனே

கேட்பவை கொடுப்பவனே கிருஷ்ணா கிருஷ்ணா என வேண்டும் வரம் அருளும் கண்ணனைப் பாடிக் கேட்டிருக்கின்றேன். அதேபோன்று வேண்டும் பொருள் கிடைக்கும் வர்த்தகப் பிருந்தாவனமாக காட்சியளித்தது களியாட்டபூமி.

மைதானத்தின் இருமருங்குகளிலும் வரிசை வரிசையாகக் கடைகள் – கல்லூரிவகுப்பறைகளிலும் நிரல் நிரலாக கடைகள். அக்கடைகளின் முன்னே அணி அணியாக மக்கள் வெள்ளம். அந்த மக்கள் வெள்ளத்துள் மிதந்து சென்று வர்த்தக நிலையங்களை எட்டிப் பார்க்கின்றேன்.

மக்கள் வங்கியின் காட்சி அறையுடன் ஆரம்பமாகியது, முதல் நிரல். 10 ரூபாவுக்கு சேமிப்புக்கணக்குத் தொடங்கிப்பலர் தமது காணிவல் வரவை நிலையான செல்வமாக மாற்றுவதைக் கண்டேன். அடுத்த அறையிலே அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன அத்தியாவசிய உணவுப்பண்டங்கள். ஆம். விற்பனைத் திணைக்களக் காட்சியறை. இதுகாலவரை கறுப்புச் சந்தையில் எட்டிப்பார்த்த லக்ஸ் பிறே - டின்பால்டின்கள் தான் அடுக்கடுக்காக எம்மை வரவேற்றன உப்போடு கூடிய முப்பத்தி இரண்டும், பழவகைகளுடன் கூடிய அத்தனை டின் சரக்குகளும் நம்மைப் பார்த்து பல்லை இளித்தன. அப்பாடா இப்போதாவது இவைகளைக்காணக் கொடுத்து வைத்திருக்கிறோம் என ஜே. ஆருக்கு ஒரு நன்றி கூறிவிட்டு அடுத்த அறையுள் பிரவேசித்தேன். அலைபுரளும் காங்கேசன்துறையினிலே மின்னியல் துறையில் சாதனை பல செய்யும் ஏரோ எலக்றிக்கலஸ் அறை அது. தமிழ் மண்ணிலே உருவாகும் தரமான மின் உபகரணங்களைக் கண்ட பெருமையுடன் பண்டத்தரிப்பு ஐவுளி அறையுள் நுழைந்தேன் தமிழ் மண்ணின் தரத்திற்கு மேலும் மெருகூட்டுவதுபோல் மலிவுவிலையில் உயர்ந்த ரக ஆடைகள் விற்பனையாகிக் கொண்டிருந்தன. யார் 18-50 க்கு திறமான லோங்ஸ் பீஸ் விற்றுக்கொண்டிருந்தார்கள். பக்கத்து அறை சங்கானை உற்பத்தித் தரத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. இங்கு சேட்துணி 11 ரூபாவாக விற்பனையாகிக் கொண்டிருந்தது. இதற்கு அடுத்த அறையில் பட்டிக் துணிகளும் இரும்பு சேவிங் பெட்டிகளும் இஞ்சுகல்குலேட்டர்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதற்கு அடுத்ததாக இருந்த ஈரோ எலக்றிக்கல்ஸ் காட்சியறையில் இறக்குமதி செய்யப்பட்ட புத்தம்புது டேப் றெக்கோர்ட்டர்களும் இலக்ரெனிக் மணிக்கூடுகளும் நிறைந்து காணப்பட்டது. இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் குரைக்கும் நாய்ப் பொம்மை பார்ப்பவர்களை கவர்ந்து கொண்டிருந்தது.

இறுதியாக யாழ் ஆசனக் கோவில் கட்டிட நிதிக்காகப் பொருட்கள் விற்பனைசெய்யப்படும் காட்சியறை இருந்தது. கொடுக்கும் விலைக்குப் பெறுமதியான பொருட்கள், அதே வேளை இறை பணிக்கும் கொடுக்கும் வாய்ப்பு காட்சி அறைக்கு வெளியே புனித மரியாள் ஆலயத்தின் வரைபடம் வைக்கப்பட்டுள்ளது. அண்டிவரும் அடியார்க்கு நாடிவரும் குறை தீர்க்கும் மரியன்னையின் கோவில் வரைபடத்தில் இருப்பதுபோல் அழகுக் காட்சி அளிக்கவைப்பது, அவள் பக்தர்கள் அளிக்கும் காணிக்கையில்தான் தங்கியுள்ளது.

### இசை வெள்ளத்தில்...

காட்சி அறைகளை விட்டு வெளியே வந்த என்னை நாதஸ்வரக் கானம் மேடையை நோக்கி இழுத்துச் சென்றது. பிரபல தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தியின் அருமை மகன், தந்தையைப் போலவே தாள லயத்துடன் மேளக்கச்சேரி செய்துகொண்டிருந்தார். இத்தனைக்கும் வயது பதினொன்றுதான். அவருடன் கூட நாதஸ்வர வித்துவான் கணேசனின் சிறிய மகனும் சேர்ந்து ரசிகர்களை மெய்மறக்கச் செய்தனர். 'நாளை நமதே' போன்ற பாடல் மெட்டுக்கள் நாதஸ்வரத்தில் இசைத்து ரசிகர்களுக்கு ஆனந்தம் ஊட்டினர் இக்குழுவினர்.

இந்த மேடையிலே வீணைக் கச்சேரிகளும் இதர இசை நிகழ்ச்சிகளும் மாறி மாறி நிகழ்ந்து கீழைத்தேச இசை வெள்ளத்தில் ரசிகர்களை மூழ்கடித்துக்கொண்டிருந்தது.

மேலைத்தேச இசைப் பிரியர்களின் இதய சாந்திக்குப் பொப் இசையும் நிகழ்ச்சி நிரலிலே இடம்பெற்றிருந்தது.

### மைதானத்துள்

மின்னும் விளக்கொளியில் கவலைகளற்ற மனித சமுதாயத்தைக் களியாட்டப் பூமியிலே நான் கண்டேன். வண்ணவண்ண உடைகளில் வட்டமிடும் இளசுகள், சின்னச்சின்ன உருவங்களாய் ஓடித் திரியும் சிறார்கள், தம்மை மறந்த நிலையினிலே வலம் வரும் காதலர்கள், எம்மை மறக்கவேண்டாமென உலாவித் திரியும் வயோதிபர். இப்படி மனித சமுதாயத்தின் மொத்தப் பிரிவினரும் அங்கு ஆனந்தமாய் உலாவித் திரிந்தனர்.

### தெங்கு பனம்பொருட் கூட்டுத்தாபனம்

மைதானத்தில் அமைந்துள்ள கடைகளிலே தெங்கு பனம் பொருட்கூட்டுத்தாபன அறை என்னை வெகுவாகக் கவர்ந்தது. பனை ஓலையிலே அமைக்கப்பட்ட ஆடும் மயில், பனை மட்டையிலே உருவாக்கப்பட்ட சோடிப் பறவைகள் போன்ற கைப்பணிப்பொருட்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. பனங்கள்ளிலிருந்து சீனி வடிக்கும் இயந்திரம் ஒன்றும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ஒரு கலன் டனங் கள்ளிலிருந்து முக்கால் றுத்தல் சீனி உற்பத்திசெய்யலாமெனவும், றுத்தல் 2-50 சதப்படி விற்கலாமெனவும். இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் முழு இலங்கையும் சீனி உற்பத்தியில் தன்னிறைவு பெறுமெனவும் நிலையத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. கணபதிப்பிள்ளை தங்கவடிவேல் கூறினார். எம் குடாநாட்டின் பெருமைக்குரிய உற்பத்தியான பனஞ்சீனியை வாயில் போட்டதும் மனதுடன் சேர்ந்து நாக்கும் இனித்தது.

### நெல்லுச் சூடடிக்கும் பொறி

நெல்லுச் சூடடிக்கும் பொறி ஒன்றை ராதா மெஷினரி வேர்க்ஸ் காட்சிக்கு வைத்துள்ளனர்.

### நல்லதம்பியின் பேச்சு

நல்லதம்பியின் பேச்சு என்னும் புதுமையான விளம்பர உத்தி ஒன்று மைதானத்தின் அடியில் அமைந்துள்ள காட்சி அறையில் கையாளப்படுகிறது. ஒரு பொம்மை கையசைத்துச் சொற்பொழிவாற்றுவது போல் இது அமைக்கப்பட்டுள்ளது.

### சுழலும் கூட்டம்

மைதானத்தின் நடுவினிலே மெரிக்கோ ரவுண்டுகளிலும்,

(6ம் பக்கம் பார்க்க)

## ரோட்டரிக் காணிவல் விசேஷ நிகழ்ச்சிகள்

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ரோட்டரிக் காணிவலில் மக்களைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சி நிகழ்ச்சியாக 'சர்க்கஸ் பசிப்பியா' என்னும் சர்வதேச புகழ் வாய்ந்த சர்க்கஸ் இடம் பெறும். கதிரைபலன்ஸ் கரடியின் சாகச விளையாட்டுகள் பந்து பலன்ஸ் போன்ற சாகச விளையாட்டுகளும், பெண்மணியின் கூந்தலில் 56 றுத்தல் நிறைப்படிக்கற்களை கட்டிச் சுழலவிடுதல். கூரிய ஆணிகள் மேல் பெண்மணி ஒருவரை படுக்கவைத்து சம்மட்டியால் அடித்தல். தீப்பந்தம் போன்ற மயிர்க்கூச்செறியும் விளையாட்டுக்களும் இடம் பெறுகின்றன.

மேலும் 9-10-ம் திகதிகளில் யாழ். நகருக்கு முதன் முறையாக ஹவாய் நடன நிகழ்ச்சியில் 30-க்கும் மேற்பட்ட அழகுக் கன்னியர்கள் கலந்து கொள்கிறார்கள். மிகப் மிகப் பிரமாண்டமான இசை நிகழ்ச்சியாக அமைய இருக்கும் இந்நிகழ்ச்சியில் 20 கவர்ச்சி கன்னிகள் புடைசூழ கிற்று வார்த்தியத்தில் தென் கடல் நாட்டின் இன்னிசை ஒலிக்க கவர்ச்சிக் கன்னி குமுதினியின் கவர்ச்சி அக்கினி லிம்போ நடனமும், இந்நிகழ்ச்சியின் பின்னணி இசையை இலங்கையின் பிரபல தமிழ்-ஹிந்தி-சிங்கள இசை அமைப்பாளர்கள் அளிப்பர்.

7-ம் திகதி முதல் மின்னொளியில் கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களும் சிறப்பாக நடைபெறவுள்ளன. (கி-அ)

# மக்காரியோஸ் நல்லடக்கம் திங்கட்கிழமை நடைபெறும்

## 40 நாள் தேசிய துக்கம்

ஏதென்ஸ், ஆக. 4
உலகத் தலைவர்களில் ஒருவரும், சைப்பிரஸ் ஜனாதிபதியுமான ஆர்ச் பிஷப் மக்காரியோஸின் நல்லடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

பிரிட்டனிடம் இருந்து சைப்பிரஸுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த ஆர்ச் பிஷப் மக்காரியோஸின் திடீர் மறைவையடுத்து 40 நாள் துக்கம் அனுஷ்டிக்க சைப்பிரஸ் அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது தெரிந்ததே.

ஜனாதிபதி மாரடைப்பால் திடீர் மரணமடைந்ததையடுத்து சகலகட்சித் தலைவர்களையும் கொண்ட தேசிய சபையும் அமைச்சரவையும் அவசரக் கூட்டம் ஒன்றினை நடத்தின.

இக்கூட்டத்திற்கு பாராளுமன்றத்தின் தலைவரான திரு ஸ்பைரோஸ் சைப்பிரியானோ தலைமை வகித்தார். சைப்பிரஸின் அரசியல் திட்டப்படி புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படும்வரை பாராளுமன்றத்தலைவரான சபாநாயகரே தற்காலிக ஜனாதிபதியாகக் கடமையாற்றுவார்.

தற்காலிக ஜனாதிபதி 45நாட்களுக்கே பதவிவகிக்க முடியும் ஆனால் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் அமைச்சரவை இப்பதவிக்காலத்தை நீடிக்கலாம்.

ஆர்ச் பிஷப் மக்காரியோஸுக்கு கடந்த ஏப்ரலில் சிறிய அளவில் மாரடைப்பு ஏற்பட்டது. ஆனால் மூன்று வாரங்களுக்குள் குணமடைந்து வழமையான அலுவல்களில் ஈடுபட்டார்.

சைப்பிரஸில் ஏற்பட்ட புரட்சியொன்றின்போது அவரைக் கொல்ல முயற்சிஎடுக்கப்பட்டது.

ஆனால் அதிலிருந்து தப்பி அவர் நாட்டைவிட்டுஓடினார். பின்னர் திரும்பவும் ஜனாதிபதியாக நாடு திரும்பினார்.

கடந்த ஆகஸ்டில் கொழும்பில் நடந்த கூட்டுச்சேரா நாடுகள் உச்சிமாநாட்டிலும் கலந்துகொண்டார்.



நேற்றுமுன்தினமிரவு ஆர்ச் பிஷப்புக்கு மாரடைப்புஏற்பட்டதையடுத்து கிரேக்கபிரதமர் இருதயவியாதி நிபுணர் ஒருவரை அவசரமாக அனுப்பிவைத்தார்.

ஆனால் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. (உ)

# இந்திய — தான்ஸானிய உறவு பலப்படும்

புதுடில்லி, ஆக 4
பாரதத்திற்கும் தான்ஸானியாவுக்கும் இடையில் பொருளாதார உறவுகள் பலப்படுத்தப்படவுள்ளன.

தான்ஸானியாவுக்கு விஜயம் செய்துள்ள பாரத வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் தான்ஸானியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டது. (உ)

# தமிழ்நாடு சட்ட மேலவை ஏழு உறுப்பினர்கள் உறுதிமொழி

சென்னை, ஆக 4
தமிழ்நாடு சட்ட மேலவையின் ஏழு உறுப்பினர்களும் நேற்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இவர்களில் தமிழ்நாடு அமைச்சர்கள் நால்வர் இடம் பெறுகின்றனர்.

திருவாளர்கள் ராஜாமுகமது, நாராயணசாமி முதலியார், ராகவானந்தம், ஆர். எம் வீரப்பன் ஆகியோரே மேற்படி அமைச்சர்களாவர்.

திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள்: வீராசாமி, நீலநாராயணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மாணிக்கம் ஆகியோரே சட்ட மேலவையின் ஏனைய உறுப்பினர்களாக நேற்றுஉறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள் ஆவர். (உ)

# லஞ்சக் குற்றச்சாட்டு: எதிரி விடுதலை

கொழும்பு, வியா.
லஞ்சவழக்கொன்றில் எதிரியாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த வருமானவரி இன்ஸ்பெக்டர் ஒருவரை நீதிபதி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

திருகோணமலை நகரசபையைச் சேர்ந்த எம். மொஹமத் கல்தான் சமூன் என்ற பிரஸ்தாபவருமானவரி இன்ஸ்பெக்டர் பி. கபிலமுத்து என்பவரிடம் இருந்து 1975ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி 50 ரூபா லஞ்சம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கொழும்பு மாவட்ட நீதிபதி திரு கே. விக்னராசா எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (உ)

யாழ்ப்பாணம்

## மாநகர சபை விசேட ஆணையாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ். மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றிய திரு. க. சிவஞானம் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசின் புதிய திட்டப்படி நேற்று முதல் விசேட ஆணையாளராகப் பதவிஏற்ற திரு. க. சிவஞானம், முன்பிருந்த விசேட ஆணையாளர் திரு. ஏ. யோசெப்பின் நல்ல செயல் திட்டங்களை நல்லமுறையில் தொடர்ந்தும் செய்வதாகக் கூறியுள்ளார். (க)

"தமிழ் பேசும் மக்களின்

# உரிமைகளை அரசு சட்ட மூலம் வழங்கும்"

யாழ்ப்பாணம், வெள்ளி
"ஐக்கிய இலங்கையில் நம்பிக்கை வைத்து வாக்களித்த 3500 வாக்காளருக்கும், என்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஏனைய அபேட்சகர்களுக்கு ஆதரவளித்தவர்களுக்கும், எவ்வித பாகுபாடுமின்றி பாராளுமன்ற உறுப்பினரால் செய்ய முடியாத சேவைகளையும், உதவிகளையும் அரசாங்கம் மூலம் செய்துகொடுப்பேன்."

மானிப்பாய் தொகுதியில், ஐக்கியதேசியக்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு ஆர் எஸ். அலோசியஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: மானிப்பாய் தொகுதியில், வன்செயல்கள், இடர்பாடுகள், நெருக்கடிகள் மத்தியில், 3500 பேர் ஐக்கியதேசியக்கட்சியை ஆதரித்து வாக்களித்துள்ளார்கள். எனவே ஐ. தே. கட்சி அரசு எந்த இன, மத, சாதி பாகுபாடின்றி தமிழ்ப் பேசும்மக்களின் உரிமைகளைச் சட்டமூலம் வழங்க நடவடிக்கை எடுக்குமென உறுதி அளிக்கின்றேன்.

எனக்கு எதிராகப் பிரசாரம் செய்தவர்களை, வாக்களித்தவர்களை, எதுவித பழிவாங்கலும் செய்யமாட்டேன். தூய்மையாக சேவை செய்வேன். மானிப்பாய் தொகுதி மக்களின் தீர்ப்புக்குத் தலை வணங்குகிறேன்.

தரப்படுத்தலினால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மாணவர்களின் விரக்தியை போக்கி திறமையின் அடிப்படையில் சகலதுறைகளிலும் சமவாய்ப்பு கொடுப்பதே ஐ. தே. கட்சி அரசின் நோக்கம். இது விரைவில் சாத்தியமாகும்.

ஐ. தே. க. அரசாங்கத்திற்கு தமிழ்மக்கள் தங்கள் பூரண ஆதரவை வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். (க)

# சிறுமிமீது பலாத்காரம்

பதுளை, வியாழன்
பதினொரு வயதுச் சிறுமி ஒருவரை முப்பத்தெட்டு வயது நபர் ஒருவர் பலாத்காரமாகக் கெடுத்தாராம்.

அக்கம்பிட்டியாவைச் சேர்ந்த எம். சுமணரத்ன என்ற நபர் அதேயிடத்தைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுமியைப் பலாத்காரமாகக் கெடுத்ததாகக் கிடைத்த புகாரையடுத்து மொனறாகலைப் பொலிசார் சந்தேகநபரைக் கைதுசெய்து மொனறாகல நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை இம்மாதம் 8ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ)

# லெபனானுக்கு அமெரிக்க இராணுவ உதவி

பெய்றூட், ஆக. 4
லெபனானுக்கு அமெரிக்கா 10 கோடி டாலர் இராணுவ உதவியை வழங்கவிருக்கிறது.

பெய்றூட்டில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. வான்ஸுக்கும் லெபனான் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து திரு. வான்ஸ் மேற்படி தகவலை வெளியிட்டார். (உ)

## பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

டாக்கா, ஆக. 4
பாரதத்திற்கும், பங்களாதேஷுக்கும் இடையே கங்கை நீர்ப் பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நேற்று டாக்காவில் மீண்டும் ஆரம்பமாகின. (உ)

கோலாலம்பூரில்

# தென்கிழக்காசிய நாடுகளின் உச்சி மாநாடு ஆரம்பம்

கோலாலம்பூர், ஆக. 4
தென்கிழக்காசிய நாடுகளின் உச்சிமாநாடு இன்று கோலாலம்பூரில் ஆரம்பமாகியது.

இம் மாநாட்டில் ஜப்பான் தீவிர அக்கறை செலுத்தியுள்ளதாக டோக்கியோ செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆசியாவுடன் தாம் தீவிர ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொள்ள தாம் விரும்புவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. (உ)


சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்

கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் றேட்டுத் தெற்கு,
கொழும்பு - 10
போன்: 24261-5


## திருநெல்வேலியில் சாதனைத் தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி
திருநெல்வேலி பெண்கள் விவசாயப் பாடசாலை சாதனைத் தினம் இம்மாதம் 7-ம் திகதி பிற்பகல் பாடசாலையில் நடைபெறும்.

இவ்விழாவில் பொருட்காட்சியும் செய்கை முறையும் காண்பிக்கப்படும்.

திரு நா. சிவமுத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. எஸ். நடேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். திருமதி நடேசன் பரிசில்களை வழங்குவார். யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா, திரு. ரி. என். மாணிக்கவாசகர், திருமதி சிவரத்தினம், திரு. குலநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றுவர். (இ)

# புனிதமான பணிக்கு றோட்டரிச்சங்கம் உதவுகிறது

## முன்னாள் கவர்னர் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி
'புற்றுநோயாளர்க்கு சிகிச்சையளிப்பதற்கும் றோட்டரிச் சங்கத்தின் சமூக சேவைகளுக்கும் சம்பத்திரிசியார் கல்லூரிச்கும் நீங்கள் கொடுக்கும் பணம் பயன்படுகின்ற காரணத்தால் மிகப் புனிதமான பணிக்கு இந்தக் காணிவல் மூலம் உதவுகின்றீர்கள்'.

இவ்வாறு முன்னாள் றோட்டரிக் கவர்னரும் சிதுவை ஆலையின் உரிமையாளருமாகிய திரு. டொனல்ட் விஜயவர்த்தன புதன்கிழமை மாலை யாழ். றோட்டரிக் காணிவலின் விவசாயிகளின் இரவை தொடக்கி வைத்துப் பேசுகையில் கூறினார். அவர் தமது உரையில் 'கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பே யாழ். றோட்டரிச் சங்கத்தின் திறமையான சேவையை நான் அறிவேன். அந்த தரத்துக்கு எவ்விதமான பழுதும் ஏற்படாத முறையில் சர்வதேச தரத்துடன் யாழ். றோட்டரிச் சங்கம் இன்றும் பணியாற்றி சமூக சேவையில் முன்னணியில் திகழ்கிறது.

யாழ். குடாநாட்டின் விவசாயிகள் முழு இலங்கையினதும் பொருளாதாரத்திற்கும் அச்சாணியாக திகழ்கின்றார்கள். இங்கு உற்பத்தியாகும் மிளகாய், வெங்காயம் போன்ற உப உணவுப் பொருட்களே தெற்கின் சுயதேவைக்கும் உதவுகிறது. எனவே அத்தகைய பெருமை படைத்த விவசாயிகள் இரவை தொடக்கி வைப்பதில் பெருமையடைகிறேன்' என்றார்.

தமது பேச்சின் இறுதியில் காணிவல் நிதிக்கு அன்பளிப்பு ஒன்றையும் திரு. விஜயவர்த்தன வழங்கினார்கள்.

இவ் வைபவத்தின் ஆரம்பத்தில் சம்பத்திரிசியார் கல்லூரிச் சந்தியில் வந்து இறங்கிய பிரதம விருந்தினர் திரு. வி. ஜயவர்த்தனவை யாழ். றோட்டரிச் சங்கத் தலைவர் சட்டத்தரணி குணரத்தினமும் சம்பத்திரிசியார் கல்லூரி

(5-ம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் கூட்டணியுடன் இணைய வேண்டும்

## திருமலைக் கூட்டத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் மொழிவழித் தொழிற்சங்க கூட்டணியின் ஓர் அங்கமாக இணையவேண்டுமென்னும் தீர்மானத்திற்கு தொழிற்சங்க வட்டாரங்களில் பலத்த வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை நகர மண்டபத்தில் நாளை சங்கத் தலைவர் திரு ம. வேலுப்பிள்ளை தலைமையில் நிகழவிருக்கும் 11வது உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புத்தூர் கிராமாட்சி மன்றத்தைசேர்ந்த திரு சு கருணைநந்தல்ஞ மேற்படி இணைப்புக்கான தீர்மானம் பிரேரணை வடிவில் கொண்டுவரப்படுகிறது.

மேற்படி கூட்ட நிகழ்ச்சிநிரலில் 6 வது பிரேரணையாக அமைந்துள்ள தீர்மானம் வருமாறு: உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் மொழிவழித் தொழிற்சங்க கூட்டணியின் ஓர் அங்கமாக இணையவேண்டுமெனவும் கூட்டணி எடுக்கும் சகல தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் பங்கெடுக்க வேண்டுமெனவும் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

கடந்த வருடப் பொதுக்கூட்டத்தின்போது திரு மா புலேந்திரனல் இந்த மாதிரியான அமைப்பிலான ஒரு பிரேரணையை கொண்டுவந்தார். ஆயினும் அங்கத்தவர் மத்தியில் போதிய ஆதரவின்மையால் அப்பிரேரணை வாபஸ் பெறப்பட்டது.

தமிழ் எழுதுவினைஞர்களது நலனைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் தாய்ச்சங்கம் முன்வராத காரணம் குறித்தே காலி நகரமண்டபத்தில் இடம்பெற்ற தாய்ச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இருந்து வெளியேறிய தமிழ் எழுதுவினைஞர்கள், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தைத் தோற்றுவித்தனர். தாய்ச்சங்கம் இல்லாதநிலையில் இருக்கும் மேற்படி சங்கம் தற்சமயம் மொழிவழித் தொழிற்சங்கத்துடன் இணையவிரும்புகிறது.

தமிழர் என்ற இன உணர்வுடனேயே உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கமும் தொடக்கப் பெற்றதால் அது ஒரு மொழிவழிச்சங்கமே என்பது இணைப்பை விரும்புபவர்களின் கருத்தாகும்.

இது ஒருபுறமிருக்க மேற்படி இணைப்புத் தீர்மானத்திற்கு தொழிற்சங்க வட்டாரங்களில் இருந்து பெரும் ஆதரவு கிடைத்துள்ளன. சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் சார்பாக தலைவர் திரு. ஆ சி. கந்தையா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இணைப்புத் தீர்மானத்தை வரலாற்றுப் பெருமை மிக்க தீர்மானமெனக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: அரசியல் ரீதியில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள். தொழிற்சங்க ரீதியில் தமிழ் தொழிலாளர் இனியும் தாமதிக்காது ஒரே கொடியின் கீழ் ஒரே தொழிற்சங்க அணியில் ஒன்றுபடவேண்டும் மொழிவழித் தொழிற்சங்கத்தில் இணைய உள்ள உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தை வருகவருக என இருகரம் கூப்பி வரவேற்று தமிழ் தொழிலாளர் நலன்பேண தங்களோடு தோளோடு தோள்நின்று போராடத்தாம் விரும்புவதாகக் கூறியுள்ளார்.

இம் முயற்சியை வரவேற்று மொழிவழித் தொழிற்சங்க கூட்டணியின் செயலாளர் திரு. சம்பந்தன், ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு க. துரைராஜசிங்கம், இலங்கை மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கத் தலைவர் திரு. கனகேந்திரன், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அரசாங்க வைத்தியசாலைத் சிறுதொழில் ஊழியர் சங்கம் ஆகியன வாழ்த்துச் செய்திகளை அனுப்பி உள்ளது. (கி)

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

ஏழாலை மகாவித்தியாலய வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விளையாட்டுப்போட்டிக்கு உடுவில் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. ச. தனஞ்செயன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

0 0 0

வல்வெட்டி வளர்மதிவிளையாட்டுக்கழகத்தின் 13-வதுவருடாந்த விளையாட்டுப்போட்டி எதிர்வரும் செப்டம்பர் மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன இவ்விழாவில் நாடகப்போட்டியும்நடைபெறவுள்ளன. (கெ)


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

**வைத்திலிங்கம்ஸ்**

இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனுல்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்

**என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்**

இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு,
கொழும்பு - 12
தொலைபேசி: 33143 — 4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


1973 ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ் மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை என்னுமிடத்தைச் சேர்ந்த கார்த்திகேசு பொன்னம்பலம் திருநாவுக்கரசு என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தினதும் உடைமைப்பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

கார்த்திகேசு பொன்னம்பலம் திருநாவுக்கரசு கைம்பெண் மகேஸ்வரி, இல. 6, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

விண்ணப்பகாரர்

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 362

எதிராக

திருநாவுக்கரசு சிவானந்தராசா, இல. 6, அன்னசத்திர ஒழுங்கை. தற்போது நியூயோக் அவரின் அற்றேணித் தத்துவகாரன் செல்லையா செல்வரத்தினம், இல. 46, போஸ்வல்பிளேஸ் வெள்ளவத்தை மூலமாக.

எதிர்வாதி

1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 24-ந் திகதியைக் கொண்ட 281-ம் பிரிவின் கீழான விண்ணப்பத்தில்சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய உறுதிக்கூற்றுக்கள் பார்த்தமாத்திரத்தில் நிருபிக்கப்பட்டுள்ளனதென திருப்தியடைந்தமையால் மேலதிக பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் வழங்கிய அதிகாரப்படி யாழ்ப்பாணமாவட்டத் தத்துவபத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது.

இக்கட்டளையின் அறிவித்தலைப்பெற்ற எவராவது அல்லது வேறு எவராவது 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 17-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன் தக்க காரணங்காட்டி ஆட்சேபனை தெரிவித்தாலன்றி,

மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மனைவி என்றவகையில் நிருவாகப்பத்திரம் பெறுவதற்கு உரித்துடையவரென்றும் அவ்வண்ணம் அவருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்பட்டதென்றும்,

இத்தால் 283 (1) (2)ம் பிரிவின்கீழ் செயல்பட்டு கட்டளையிடுகிறேன்.

1977 ம் ஆண்டு
வைகாசி மாதம் 24-ந் திகதி

ஒப்பம்

கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி.
6767

### கூப்பன் யாருடையது?

ஐந்து கூப்பன்களும் இரண்டு பங்கீட்டு அட்டைகளும் புனித சம்பத்திரிசியார்கல்லூரி உதவி சாரணாசிரியர் ஞா. சூசைதாசன் என்பவரால கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

தோட்ட ஆசிரியர்களை

# பயிற்சி நடுவில் திருப்பி அழைக்கிறார்களாம்

அரியாலை, வியாழன்

தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து ஆசிரிய பயிற்சிபெற பயிற்சிக்கலாசாலையில் சேர்க்கப்பட்டவர்கள், அவர்கள் முன்பு படிப்பித்த தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததினால் மறுபடியும் அவர்கள் படிப்பித்த பழைய பாடசாலைகளுக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். இப்படிப் பயிற்சி பெற்ற இவர்கள் இடைநடுவில் தமது பயிற்சியை முடித்துக் கொள்ளாமலே வெளியேறித் தத்தமது பழையபாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.


## கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பிப்போர் 'தலைவர், கரைச்சிதெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி' என்ற விலாசத்திற்கு தபால் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிக்கப்பட்டு 20-8-77-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும்.

பொது முகாமையாளர் — தரம். 2

சம்பள அளவுத் திட்டம் 500 — 825
20—10, 25—5

தகமைகள்

1. கூட்டுறவுப் பயிற்சியுடன் 3 வருடகால அனுபவமுடைய பட்டதாரி,
அல்லது
2. இரண்டு வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப்பத்திரம் உடைய பட்டதாரி,
அல்லது
3. தரம். 111 பதவியொன்றில் ஒருவருடகால அனுபவமும், கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப் பத்திரமும் பெற்றுள்ள பட்டதாரி
அல்லது
4. 50 இலட்சம் ரூபாவினை வருடாந்த மொத்த விற்பனையாகக்கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 5 வருடகால அனுபவத்தினையுடைய ஒருவர்,
அல்லது
5. 10 வருட கால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறப் பரிசோதகர்.

வயது:- 25 — 45 வரை

ஒப்பம்:
வே. நடராசா,
தலைவர்,
கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

கிளிநொச்சி,
3—8—77.
6773



## இலவச கராட்டி காட்சி

காணத்தவறாதீர்கள்! அரிய சந்தர்ப்பம்!!

இடம்:

**சென்பற்றிக்ஸ்மைதானம்**

காலம்: 6-8-77 சனி இரவு

யாழ். ரோட்டரிச் சங்கத்தினரும் யாழ். சென்பத்றிக்ஸ் கல்லூரிப் பழைய மாணவரும் நடாத்தும் களியாட்ட விழாவில், யாழ். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலையின் ஆதரவில் உலகப் புகழ்பெற்ற கராட்டி வீரர்கள், வீராங்கனைகள் இணைந்து அளிக்கும் கராட்டி நிகழ்ச்சி.

6768



விரைவில் வெளிவருகின்றது
தேசிய கல்விப் பொதுத் தராதர
(N. C. G. E) பரீட்சைக்குரிய

## தமிழ் மொழிப் பாடப் பயிற்சிகள் I & II

புதிய பாடத்திட்டத்தினைப் பூரணமாகத் தழுவி எழுதப்பெற்ற - இரண்டு பகுதிகளைக் கொண்ட - பயிற்சி நூல். மாணக்கர் சுயமாகக் கட்டுரை முதலியன எழுதிப் பயிற்சி பெறுவதற்குதவும் முறையில் இரண்டாம் பகுதி வினாக்களுக்கு விரிவான குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கல்வித் துறையில் நீண்ட காலம் அநுபவம் பெற்ற ஒருவரின் உதவியுடன் தயாரிக்கப்பெற்றது இந்நூல்.

முன் எம்மால் வெளியிடப்பெற்ற' 'தமிழ் மொழிப் பாடப் பயிற்சிகள்'' என்னும் நூலின் மறுபதிப்பாக, மாணவர்கள் விசேட சித்திபெற வழிகாட்டும் வகையில், கடந்த காலப் பரீட்சை வினாத் தாள்களின் அமைப்பினையும் முறையினையும் தரத்தினையும் தழுவி புதிய திருத்தங்களுடன் இந்நூல் வெளிவருகின்றது.

வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்
சுன்னாகம்.

88-வது நாள்
ராணி எம். ஜி. ஆர். — லதா ('இருவேடங்கள்') நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Daily: at 4-45, 7-00 & 9-30 p m
(JAFFNA)
Christian Fechner the Creator of the "Crazyboys"
now Presents his Most Hilarious Comedy to Date!
PIERRE RICHARD JANE BIRKIN
in
Claudezidis
"THE GOOSE CHASE"
Color

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி: 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-லதா - நாகேஷ் அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ் நகர் தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
போன்: 7642
ஃ என். டி. ராமராவ் ஃ சௌகார்ஜானகி
ஃ பி. கண்ணாம்பா
ராஜசேவை
(பயங்கர வாள் சண்டைகள் நிறைந்த படம்)

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

கடைசி வாரம்
ராஜா 87-வது தினம்
(யாழ்நகர்) போன்: 7160 தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.


## குருபூர்ணிமாவிழா இன்றையநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கம் நடாத்தும் குருபூர்ணிமா விழா வேதுநளான இன்று, திருப்பூங்குடி வி.வி. கே. ஆறுமுகம் குழுவினரின் 'சிவானந்த விஜயம்'' என்னும் வில்லுப்பாட்டும், திரு. எஸ். ஆர் திருஞானசம்பந்தனது பண்ணிசையும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (கெ-அ)

## புனிதமான

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் பிலிப்பும் மாலை சூட்டி வரவேற்று மேளதாள மரியாதையுடன் அழைத்து வந்தனர். நுழைவாயிலின் நாடாவை வெட்டியதின் மூலம் திரு. டொனல்ட் விஜயவர்த்தன வைபவத்தை தொடக்கி வைத்தார்.

மைதானத்துள் நுழைந்த திரு. விஜேயவர்த்தன ரோட்டரித் தகவல் நிலையத்தை பார்வையிட்டார். இதனை அடுத்து மேடைக்கு வந்த அவரை வரவேற்று திரு. குணரத்தினம் தலைமை உரைநிகழ்த்தினார். அவர் தமது உரையில், 'எங்கள் அழைப்பை ஏற்று 250 மைல்களுக்கு அப்பால் இருந்து தன்னுடைய வேலைகளையும் சிரமங்களையும் பொருட்படுத்தாது வருகை தந்த திரு. டொனல் விஜயவர்த்தன அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்' என்றார்.

திரு. டொனல்ட் விஜயவர்த்தன ரோட்டரி கவர்னராக இருந்து சர்வதேச ரீதியில் புகழ்பெற்றவர். அவருடைய சமூக சேவைகளை இந்நாடு என்றும் மறக்க முடியாது' என்றார் தலைவர். (கி)


வெலிங்டன்... 
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-சந்திரகாந்தா
கலைக்கோயில்

ஹோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
வளர்பிறை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
மஞ்சள் மகிமை


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உடுப்பிட்டி தனக்காரக் குறிச்சியில் ''கிராய் வயல்'' என்னும் 192 பரப்பு வயற் காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு திருமதி ஞா. கனகலிங்கம், 17, பண்டாரக்குள ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 6769

கொக்குவில் சந்தி புகையிரத வீதியில் சுமார் 50 யார் காங்கேசன்துறை வீதியிலிருந்து தூரத்தில் நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விரும்புவோருக்கு பகுதியாக பிரித்து கொடுக்கப்படும் ஆதனத்திற்கு ஈட்டுப்பணம் கட்டுபவர்களும் விண்ணப்பிக்கலாம். 15-8-77-க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6771 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 6771

## தேவை

வார்ப்பு வேலை, லேத்வேலை, கம்மாலைவேலை, வெல்டிங் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில்வரவும். ராதாமெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6755

உங்களிடம் சேரும் வேப்பம், இலுப்பம், விதைகளை சுன்னாகம் மத்திய சந்தையில் 23-ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் ''மல்ரிசொப்''பில் கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மல்ரிசொப், 23, மக்கள் சந்தை, சுன்னாகம். 6763

## தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள ஹெல்ப்பர், பவுளர் (Helpers & Bubblers) தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும். வேலை பழகுபவர்களும், பழக்கப்படுபவர்களும் உடனடியாகத் தேவை. உடனே நேரில் வரவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 6738

## இனாம்

சென். பற்றிக்ஸ் களியாட்டவிழா மைதானத்தின் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் விற்பனையாகிறது 'சோயாற்றின். ஒரு பைக்கட் சோயாற்றின் வாங்கி— 1 (B) பாய்க்கையும், 1 படத்தையும் இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். 6762

### கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

## வெற்றுச் சாக்கு விற்பனை

வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கான விண்ணப்பங்கள்'' எம்மால் 17-8-77-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் (இதில் உப்பு, சீனி, நவதானியம் மற்றும் கழிவு சாக்குகளும் அடங்கும்). விண்ணப்பங்கள் யாவும் ''பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' என விலாசமிடப்படவேண்டும்.

கடித உறையின் இடது மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' என எழுதப்படவேண்டும்.

வெற்றுச் சாக்குகளை காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 5/-ம், திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/-ம் எமது தலைமைக் காரியாலயத்தில் 15-8-77-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.

கிளிநொச்சி,
3-8-77. 6774

## விற்பனைக்கு

உன்னத நிலையில் உள்ள ஒரே பாவிப்பில் இருக்கும் பொன்ரியாக் கார் (EY 3857) உடன் விற்பனைக்குண்டுவிபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிசனர்
விதானைவளவு,
சித்தன்கேணி. 6772

## ரம்ழான் நோன்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

முஸ்லிம்களின் புனித ரம்ழான் நோன்பு இம்மாதம் 16ம் திகதிஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 16ம் திகதி பெருநாள் நடைபெறும். இம் மாதம் 16ம் திகதி பிறை தெரிந்தவுடன் தமக்கு அறிவிக்குமாறு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் முஸ்லிம் மக்களை கோரியுள்ளனர்.

ரம்ழானை யொட்டி பங்கீட்டுக்கு நாட்டரிசி வழங்குமாறும் கூடியளவு பேரீந்து பழம் வழங்குமாறும், உணவு அமைச்சரை பல முஸ்லிம் நிறுவனங்கள் கோரியுள்ளன. (கெ-அ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

'சிங்களம் தந்த சிறை' யென்னும் நூலை கிளிநொச்சித் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் திரு ப. வை. ஜெயபாலன் வெளியிட்டுள்ளார். இந்நூலில் கிளிநொச்சித் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரியும், ஐந்து இளைஞர்களும் சட்டமறுப்புக் கைதிகளாகப் பெற்ற சிறை அனுபவங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. (கெ-அ)


வின்ஸர் 5-8-77 வெள்ளி முதல்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்



சிவாஜி, மஞ்சுளா,
கமலஹாசன், தேவிகா,
ஜெயசித்ரா,
S. V. சுப்பையா
நடித்த
சத்யம்
டைரக்ஷன்: S. A. கண்ணன்
[ஈஸ்மன் கலர்]
[திரைக் கதை, வசனம்: வியட்னாம் வீடு சுந்தரம்]

மகத்தான 2-வது மாதம் கடைசிவாரம்
ஸ்ரீதர் சிவாஜி - பத்மபிரியா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - சகுந்தலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) Now Showing
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ACTION THRILL
in
TOO HOT TO HANDLE

ஈழநாடு
EELANADU

# தமிழர் பிரச்னைகளை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜனாதிபதியை மக்கள் தெரிவர்

புதிய அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியை மக்களே தெரிவுசெய்வார்.

ஜனாதிபதிக்கு நிர்வாகத்தில் அதிகஅதிகாரம்வழங்கப்படும். ஜனாதிபதியே பிரதமரையும் அமைச்சர்களையும் தெரிவு செய்வார்.

## பல பல்கலைக்கழகங்கள்

இப்போது இருக்கும் ஒரு பல்கலைக்கழகம் என்ற முறையை மாற்றி பலபல்கலைக் கழகங்கள் அமைக்கப்படும்.

பல்கலைக்கழகங்களில் புகுவதற்கு வசதி கிடைக்காத மாணவர்களுக்காக திறந்த பல்கலைக்கழகம்ஒன்றும் நிறுவப்படும்.

## கிளர்ச்சி இளைஞர்களுக்கு நிவாரணம்

1971 ஏப்ரல் கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்களின் மனப்போக்கை ஆராய்ந்து அவர்களை நாட்டின் நற்பிரஜைகளாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## இளைஞர் நலம்பேண அமைச்சு

நாட்டின் அபிவிருத்தியில் சகல இளைஞர்களையும் ஈடுபடுத்தும்வகையில் ஆண், பெண் இருபாலாரும் அடங்கிய இலங்கை இளைஞர் இயக்கம் ஒன்று அமைக்கப்படும். இளைஞர்களின் நலம் பேண தனியானதொரு அமைச்சும் அமைக்கப்படும்.

## பௌத்தத்துக்கு உரிய இடம்

பௌத்தமதத்துக்கு உரிய இடம் வழங்கும் அதேநேரத்தில் ஏனைய மதங்களின் நியாயமான உரிமைகளுக்குஉத்தரவாதம் அளிக்கப்படும்.

## தகைமை அடிப்படையில் நியமனம்

நாட்டின் சகல மக்களுக்கும் தகைமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

நாட்டின் அபிவிருத்திக்கு அபிவிருத்தித் திட்டங்கள் இருந்தால் மட்டும்போதாது; ஊழலற்ற நாட்டுப் பற்றுள்ள அதிகாரிகளும் மிக அவசியம்.

மனித ஒழுக்கத்தின் அடிப்படையில் புதிய சமுதாயம் அமைப்பதே அரசின் இலட்சியமாகும்.

வறுமையைப்போக்கி நேர்மையானவர்களுக்கு இடமளிக்கப்படும்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிள்ளைகள் ஆரம்ப காலத்தில் தத்தம் தேசிய தேச சூழ்நிலையில் கல்வி பயில வாய்ப்பளிக்கப்படும்

கலாச்சார மறுமலர்ச்சி ஏற்படுத்தப்படும். கட்சி அரசியல் நிலை எப்படியிருந்தபோதிலும் நாட்டு முன்னேற்றத்தில் சகல கட்சிகளும் பங்கேற்கவேண்டும்

வளர்ந்தோருக்கு வாரம் ஒன்றுக்குஎட்டுஇருத்தலுக்குக் குறையாத தானியமும் போஷாக்கு உணவும் வழங்கப்படும்.

லஞ்சம், ஊழல் என்பன அகற்றப்படும்.

தலைவர்கள் நன்னெறியைப் பேணி மக்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

மீனில் தன்னிறைவு காண்பதில் முக்கிய பங்கெடுக்கப்படும் நியாயவிலையில் சாதனங்கள் வழங்கப்படும்.

கல்விக்குழு ஆணைச்சேவை அமைக்கப்படும்.

மூளைசாலிகளின் வெளியேற்றம் தவிர்க்கப்படும் வெளிநாடு சென்றுள்ள நம்நாட்டு மூளைசாலிகளை மீண்டும் வரவழைக்க ஏற்பாடு செய்யப்படும்.

குடும்பக் கட்டுப்பாட்டிலும் கவனம் செலுத்தப்படும்.

[உ]

## ரேட்டறி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகாச ஊஞ்சல்களிலும், குடை ராட்டினங்களிலும் சிறியோரும் பெரியோரும் கவலைகளை மறந்து களிப்பெய்திக்கொண்டிருந்தனர்.

### கிணற்றுள் சைக்கிள் ஓட்டம்

பாதாளக் கிணற்றிலே நின்று சுழன்று சுழன்று ஓடும் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் காண்பவர் நெஞ்சங்களை மயிர்க்கூச்செறிய வைக்கிறது.

(நாளை, அற்புதமான சர்க்கஸ் பசிப்பியா பற்றியும், மாஜிக்காட்சி பற்றியும் எழுதுகிறேன்.)

## பொன்விழாவும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம், வெள்ளி

லலிதஸ்வர நாதபூபதி,தேவகான இசைத்திலகம், நாதஸ்வர வித்துவான், யாழ்ப்பாணம் பி.எஸ்.ஆறுமுகம்பிள்ளையின் இசைத்திறனைப் பாராட்டியும், தவில் வித்துவான் லயஞானபூபதி பி. எஸ். ராஜகோபால்பிள்ளை இசையுலகத்திற்கு செய்தசேவையையும் பாராட்டி பொன்விழாவும், பாராட்டுவிழாவும், இன்று மாலை 5 மணிக்கு வண்ணை கதிரேசன்கோவில் மண்டபத்தில் இந்து நாகரீகத்துறை பீடாதிபதி கா. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்வைபவத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரம்பிள்ளை, என்.கே. பத்மநாதன் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (கா-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka;

## விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பக்கம் தாழும் நிலை ஆட்சிமன்றத்தில் இருக்கக் கூடாதென்றே விரும்புகிறேன்.

ஆட்சி மன்றம் என்ற தராசு நீதி கூடிய பக்கத்துக்கே சாய வேண்டும்.

புதிய சபாநாயகரைப் பொறுத்த வரையில் சம்பிரதாயங்களைக் காத்து சகல விதத்திலும் எதிர்க்கட்சியை மதித்து நடந்துகொள்ளத் தவறமாட்டார் என்றே நம்புகிறோம்.

இந்த வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் என்றவகையில் சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க் கட்சிப் பொறுப்பை எதிகவந்தோம் என்று புகல்வதிலும் பார்க்க இழந்த உரிமையை வேண்டியும் விடுதலையை நாடிநிற்கும்இனத்தின் பிரதிநிதிகளாக இங்குவந்துள்ளோம் என்பதே உண்மையானதும் பொருத்தமானதாகும்.

கோட்டை இராஜ்யத்தில் தமிழுக்கு உரிய, சிறந்த இடம் இருந்தது என்பதற்கு சரித்திரம் சான்று பகர்கிறது.

இக்கடமை இச்சபையிலும் பேணிக்காக்கப்பட வேண்டும்.

எமது தமிழ்மொழியிலேயே நாம் இச்சபையில் சகலகருமங்களையும் ஆற்றுவதற்குப்பூரண உரிமை அளிக்கப்படவேண்டும்.

இந்த உரிமை சபையிலிருந்தபோதிலும் சில வசதிக்குறைவுகள் காரணமாக தமிழ்மொழிக்கு சபையில்உரியஇடம்அளிக்கும் நிலை முன்னர் தவறிவிட்டது.

நாம் எமது மொழியிலேயே சகல கருமங்களையும் சபையில் செய்யவிரும்புகிறோம். இதற்கான ஒழுங்குகள் செய்யப்படுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு விடுதலை நாடி நிற்கும் இனத்தின் பிரதிநிதிகள் என்றவகையில் நாம் சபையின் சம்பிரதாயங்களைக்கூட மீறி நடக்கும் நிலை ஏற்படலாம். அந்நேரத்திலும்கூட நீதிவழங்கப்படவேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்.

இந்த உயர்பதவிக்கு (சபாநாயகராக) திரு. அல்விஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து த. வி. கூட்டணிசார்பில் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவிக்கிறேன். பலகாலம் சீரோடும் சிறப்போடும் இப்பணியைப் புரிய அவரை வாழ்த்துகிறேன்''.

### மைத்திரி உரை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயகா பேசுகையில், ''எதிர்கட்சித்தலைவர் கூறியதுபோல் எதிர்க்கட்சிகளின் உரிமைகள் சபையில் பாதுகாக்கப்பட வேண்டும்'' என்றார்.

### தொண்டமான் பேச்சு


இ. தொ. காங்கிரஸ்தலைவர் திரு. எஸ். தொண்டமான் எம். பி. பேசுகையில் ''ஜனநாயகப்பண்பாடு காக்கப்பட வேண்டும். போட்டியின்றி நடைபெற்ற சபாநாயகர் தெரிவைப்பாராட்டுகிறேன்.

30ஆண்டுகாலமாக பாராளுமன்றத்தில் எமது குரல் ஒலிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. நீதியின் அடிப்படையில் எமது கட்சி சபைக்கு பூரண ஒத்துழைப்புஅளிக்கும்'' என்றார்.

சபாநாயகர் நன்றி தெரிவித்துப்பேசுகையில் ''நீதிவழுவாது நான் நடப்பேன்'' சகலரதும் ஒத்துழைப்பும் ஆதரவும் எனக்குத்தேவை என்றார்.

### பிரேமா உரை

சபை முதல்வர் திரு. ஆர். பிரேமதாஸ பேசுகையில் ''எமது குறைகளை சொல்லலாம். நீதியும் சட்டமும் பாதுகாக்கப்படும் இதனை முக்கியமாக எதிர்கட்சியினருக்கு கூறவிரும்புகிறேன்.'' (உ)



மயிலர்: இந்த அரசாங்கம் ஐம்பது வயது மனிதனை இருபது வயது மனிதனுக்கும் குளிசைகள் இறக்குமதி செய்யாதோ.

வேலர்: ஏன் இளமையாக விரும்புகிறாய்?

மயிலர்: பெட்டையள் பெடியன்களை சைக்கிளில் ஏற்றிக்கொண்டுபோறகாலம் வந்திட்டுது.

— சுந்தர்

## பிரேமா முன்மொழிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீசிப் பறந்துகொண்டிருந்தன.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாது மக்கள் காலிமுகத் திடலில் நிற்பதற்கு இடமில்லாமல் தேசிய அரச பேரவைக் கட்டடத்தையும் அண்மிக்க முற்பட்டது.

மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் தீவிர கவனம் செலுத்தினர்.

### ஒளிப் பிழம்பாகக் காட்சியளித்த விசேட மேடை

ஜனாதிபதி அமர்வதற்கென்று விசேட மேடை ஒன்று அமைக்கப்பட்டு, விசேட ஆசனம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி அரசின் கொள்கைத் திட்ட உரையை நிகழ்த்தும் பொருட்டு இந்த ஆசனம் அடங்கிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. இந்த மேடை மின் விளக்குகளால் அலங்கரிக்கரிக்கப்பட்டு ஒளிப்பிழம்பு போல் எழிலுறக் காட்சியளித்தது.

### மரியாதைக் குண்டுகள்

ஜனாதிபதி குறிப்பிட்ட மேடையை வந்தடைவதற்கு முன்பதாக இராணுவ வீரர்களினால் 21 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

முதல் தடவையாக மின் கம்பங்களில் எல்லாம் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன, சபாநாயகர் தெரிவு பற்றியும் சபாமண்டப நிகழ்ச்சிகள் பற்றியும் வெளியே திரண்டு நின்ற மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இப்புதிய அறிவிப்பு முறை விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மக்கள் சபா மண்டப நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள இந்த ஏற்பாடு உதவியாக இருந்தது.

### சபாநாயகர் தெரிவு

சபை முதல்வர் திரு. ஆர். பிரேமதாஸ தலைமையில் சபை கூடியபோது சபாநாயகர் தெரிவு முதலாவதாக இடம் பெற்றது.

கோட்டே எம். பி. திரு. ஆனந்த திஸ்ஸ டி. அல்விசின் பெயரை திரு பிரேமதாஸ முன்மொழிந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வழிமொழிந்தார்.

திரு. அல்விஸ் ஏகமனதாக சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### பிரேமாவும் அமிரும்

திரு. அல்விஸ் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டதும் அவரை திருவாளர்கள் பிரேமதாஸாவும் அமிர்தலிங்கமும் அவரது கரங்களைப் பற்றி சபாநாயகர் ஆசனத்திற்கு அழைத்துச் சென்றனர்.

சபாநாயகர் தம் ஆசனத்திற்கு அழைத்துச் செல்லப்படுகையில் ஏனைய எம். பீக்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

### உபசபாநாயகராக

உபசபாநாயகராக பேருவலை எம். பி. மக்கீன் மாக்காரின் பெயரை திரு. பிரேமதாஸா முன்மொழிய நல்லூர் எம்.பி திரு. மு. சிவசிதம்பரம் வழிமொழிந்தார்.

ஏகமனதாக இத்தெரிவும் இடம்பெற்றது.

குழுக்களின் உப தலைவராக திரு. பெலிகம்முனையை திரு. பிரேமதாஸா முன்மொழிய மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராசதுரை வழிமொழிந்தார்.

### நிருபர்களுக்கு வசதி

பொதுமக்கள் கலரியில் இன்று அனுமதிக்கப்படவில்லை. உள்நாட்டு வெளிநாட்டு நிருபர்களுக்கு இடவசதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும் இடவசதி போதாததினால் பல நிருபர்கள் நிற்க வேண்டியும் ஏற்பட்டது, (உ)

## தமிழ் ஈழ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டபின்னர் கடந்த இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு கொழும்பில் திரு சிவசிதம்பரம் வீட்டில் கூடிய போது தமது திருத்தப் பிரேரணைகள் பற்றி ஆராய்ந்தது. (இ)

## இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மகளிர் கல்லூரிகளின் விளையாட்டுச் சங்கத்தின் 20ம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றன.

பிற்பகல் வேளைகளில் நடைபெறும் இப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரபல பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

வடமாநில கல்வியதிபதி திரு. கே. சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (கா-உ)